**சுருக்கம்**

திட்டங்கள் – மாநில புதிய திட்டம் – அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – நிதிநிலையில் நலிவடைந்த 30 நகராட்சிகளில் 2008–2009 மற்றும் 2009–10 ஆண்டுகளில் செயல்படுத்துதல் – 2009–10ஆம் ஆண்டுக்கான அரசின் நிதி ஒதுக்கீடு ரூ.5.25 கோடியினை (இரண்டாம் மற்றும் இறுதி கட்ட தொகை) விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண்: 158 நாள் 1.09.2009

திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 16

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.232, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, நாள் 19.11.2008.
2. அரசாணை (நிலை) எண்.262, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை, நாள் 24.12.2008.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.27820/திபி2/2008 –41, நாள் 14.5.2009.

---

**ஆணை:**

பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில், நிதி நிலையில் நலிவடைந்த 30 நகராட்சிகளில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டத்தினை 2008–2009 மற்றும் 2009–2010 ஆண்டுகளில் செயல்படுத்தவும் ஒவ்வொரு நகராட்சிக்கும் தலா ரூ.75 லட்சம் வீதம் மொத்தம் ரூ.22.50 கோடி ஒப்பளித்து அரசு ஆணையிட்டது. அதன்படி, 2008–2009ஆம் ஆண்டிற்கு அரசு வழங்கும் நிதி ஆதாரத் தொகை ரூ.11.25 கோடியில் ரூ.6 கோடியினைத் திருத்திய மதிப்பீட்டில் அரசின் புதிய கணக்குத் தலைப்பில் ஒதுக்கீடு செய்ததின்படி, 30 நகராட்சிகளுக்கும் தலா ரூ.20 இலட்சம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது. மீதமுள்ள ரூ.5.25 கோடியினை, பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணையில், கேளிக்கை வரி நிதி இருப்பு கடு செய்யும் நிதியில் ஒதுக்கீடு செய்ததின்படி, 30 நகராட்சிகளுக்கும் தமிழ்நாடு நகர்புற உள் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பராமரித்தல் நிதி நிறுவனத்தின் மூலம் தலா ரூ.17.50 இலட்சம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர், பார்வை 3-ல் கண்டுள்ள தனது கடிதத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தையும் முடிக்க 2009-2010 நடப்பு நிதியாண்டிற்கான 50% தொகையான ரூ.11.25 கோடியில் இருந்து அரசு வழங்கும் நிதி ஆதாரத்தொகை ரூ.5.25 கோடியும், மற்றும் கேளிக்கை வரி நிதி இழப்பு ஈடு செய்யும் நிதியிலிருந்து ரூ.6.கோடியும் ஒதுக்கீடு செய்யுமாறு அரசினை கோரியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, 2009-2010-ம் ஆண்டில் நகராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த அரசின் நிதி ஆதாரமாக இறுதி கட்ட தொகை ரூ.5.25 கோடியினை (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) விடுவித்து அரசு ஆணையிடுகிறது. இதன் பொருட்டு அரசு (நிலை) ஆணை எண். 123/ நிதி (வ/செபொது1) துறை/ நாள் 26.3.2009-ல் வெளியிடப்பட்டுள்ள காலாண்டு நிதிக்கட்டுப்பாட்டிலிருந்து விலக்களித்தும் ஆணையிடப்படுகின்றது.

4. நடப்பாண்டு 2009-2010க்கான இதர தொகை ரூ.6 கோடியினை கேளிக்கை வரி நிதி இழப்பு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய, நகராட்சி நிர்வாக இயக்குநர் தனியாக செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட, 2009-2010ஆம் ஆண்டிற்கான அரசின் நிதி உதவித் தொகை ரூபாய் 5.25 கோடி ( ரூபாய் ஐந்து கோடியே இருபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

> 2217 – நகர்ப்பகுதி வளர்ச்சி – 05 ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் – 192 நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் முதலியவற்றுக்கு நிதியுதவி – II மாநிலத் திட்டம் JI பொருளாதார ரீதியாக நலிவடைந்த நகராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்துதல் – 09 உதவி தொகை – 02 மூலதனச் செலவுக்கான உதவித் தொகை (த.தொ.கு. 2217– 05– 192 –JI – 0920)

மேலும் பார்வை 1-ல் கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட இத்திட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் திட்டத்திற்கான நிபந்தனைகளை தவறாமல் பின்பற்றுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இத்திட்டத்திற்காக அரசு அளிக்கும் மானிய தொகையினை பார்வை ஒன்றில் கண்ட அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 30 நகராட்சிகளுக்கும் பிரித்து வழங்கவும், இத்திட்டத்தின் செயல்பாட்டிற்கு தேவையான கூடுதல் நெறிமுறைகளை

வெளியிடவும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆண்டு அறிக்கை ஒன்றினை துறைத்தலைவர் அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.32881/ MAWS/ 2009 நாள் 7.7.2009-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600 005.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
(தஞ்சாவூர்/திருநெல்வேலி/செங்கல்பட்டு/சேலம்/மதுரை/கோயம்புத்தூர்)
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை – 600 108.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை – 600 005.
மாநில தலைமை கணக்காயர் (A&E) சென்னை – 600 018.
மாநில கணக்காயர் (Audit) சென்னை – 600 018.
மாநில கணக்காயர் (CAB), சென்னை – 600 009.

நகல்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை -600 005.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலர்,
சென்னை – 600 009.
நிதி (ந.நி.ம.கு.வ)/நிதி IV /வரவு செலவு பொது I/வரவு செலவு பொது II/ வரவு செலவு ஒ/ துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அனைத்துப் பிரிவுகள்,
சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(க. சந்திரசேகர்) 9.7.09
அரசு சார்புச் செயலாளர்.